" විශිෂ්ඨ රාජ්‍ය සේවාවක් සඳහා ඇප කැපවෙමු "
ප්‍රධාන ලේකම් කාර්යාලය - බස්නාහිර පළාත
பிரதான செயலாளர் அலுவலகம் - மேல் மாகாணம்
OFFICE OF THE CHIEF SECRETARY - WESTERN PROVINCE
204, ඩෙන්සිල් කොබ්බෑකඩුව මාවත, බත්තරමුල්ල.
204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.
204, Denzil Kobbekaduwa Mawatha, Battaramulla.
ප්‍රධාන ලේකම් / பிரதான செயலாளர் / Chief Secretary
දුරකථන / தொலைபேசி / Telephone - 011 - 2092599
ෆැක්ස් / பெக்ஸ் / Fax - 011 - 2092601
ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail - chiefsecretary@wpc.gov.lk
පොදු දුරකථන / தொலைபேசி இலக்கம் / General Telephone - 011 - 2093000
SLSI ISO 9001 / SLAB ACCREDITED ISO/IEC: 17021 QMS-001-01

මගේ අංකය / எனது இலக்கம் / My No. CSWP/ADM/18-38/FI/01-2019
ඔබේ අංකය / உமது இலக்கம் / Your No.
දිනය / திகதி / Date 2019/04/24

ஆளுநர் செயலாளர் (மே.மா.),
செயலாளர், மாகாண அரச சேவை ஆணைக்குழு (மே.மா.),
சபைச் செயலாளர் (மே.மா.),
அனைத்து அமைச்சுக்களதும் செயலாளர்கள் (மே.மா.),
பிரதிப் பிரதான செயலாளர் (நிர்வாகம்/ ஆளணி மற்றும் பயிற்சி/ நிதி/ திட்டமிடல்/ பொறியியல்),
மாகாண வருமான ஆணையாளர் (மே.மா.),
பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் (மே.மா.),
நிர்வாக அலுவலர் (நிர்வாகம்)
பிரதான செயலாளரின் இணைப்புச் செயலாளர்,

**அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 21/88(I), 03/2019, 02/2019, 06/2019 மற்றும் 05/2019 ஆகியவற்றை மேல் மாகாணத்திற்கு உரித்தாக்கிக் கொள்ளல்.**

அரச நிர்வாக மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைகளை மேல் மாகாணத்திற்கு உரியதாக்கிக் கொள்வதற்கு கௌரவ ஆளுநர் அங்கீகாரம் அளித்துள்ளதாக ஆளுநர் செயலாளரின் இலக்கம் GOS/ADM/02/19/01/2019 மற்றும் 2019.04.18 ஆந் தேதியிட்ட கடிதத்தின் மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (அச்சுற்றறிக்கைகளின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.)

| தொடரிலக்கம் | சுற்றறிக்கை இலக்கம் மற்றும் திகதி | விடயம் |
|---|---|---|
| 01. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 21/88(I), 2019-01-29 | கடமையிலீடுபட்டிருக்கும் போது பயங்கரவாத வன்முறைச் செயற்பாடுகளால் காயமடையும் / நிரந்தரமாக அங்கவீனமடையும் அரச அலுவலர்களுக்கு / மாகாண அரச சேவை அலுவலர்களுக்கு / அரச கூட்டுத்தாபன அலுவலர்களுக்கு வைத்திய உதவிக் கொடுப்பனவு / நஷ்டஈடு வழங்குதல் மற்றும் பயங்கரவாத வன்முறைச் செயற்பாடுகளால் மரணமடையும் அவ்வாறான அலுவலர்களில்/ ஊழியர்களில் தங்கியிருப்போருக்கு நஷ்டஈடு வழங்குதல். |
| 02. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2019, 2019-02-20 | தாபனக் கோவை பகுதி II இன் XLVIII அத்தியாயத்தின் 19.5 ஆம் உபபிரிவின் கீழ் ஒழுக்காற்று விசாரணை அலுவலர்களது பெயர்ப்பட்டியல் |
| 03. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 02/2019, 2019-02-22 | பூரண சம்பளத்துடன் கூடிய விடுமுறைக்கான கட்டாய சேவைக்காலத்திற்குள் கடமையிலுள்ள அலுவலருக்கு சம்பளமற்ற கற்றல் விடுமுறை வழங்குதல். |
| 04. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/2019, 2019-02-27 | 2016 இலக்கம் 12 கொண்ட தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய தாபனக்கோவையின் பகுதி I இன் பிரிவினைத் திருத்துதல். |

| | | |
|---|---|---|
| 05. | அரச நிர்வாக சுற்றறிக்கை கடிதம் இலக்கம் 15/2019, 2019-03-05 | அரசியல் உரிமைகளை அனுபவித்தல் தொடர்பான தாபனக் கோவையின் XXXII அத்தியாயத்தின் 2:3:2 ஆம் உபபிரிவினைத் திருத்துதல். |

02. அச்சுற்றறிக்கையின்படி செயற்படுமாறும் உங்களின் கீழுள்ள அனைத்து திணைக்களப் பிரதானிகளுக்கும், தாபனப் பிரதானிகளுக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் தெரியப்படுத்துமாறும் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கே.என்.சூரியாரச்சி,
உதவிப்பிரதான செயலாளர் (நிர்வாகம்),

ஒப்பமிட்டது - பிரதீப் யஸரத்ன,
பிரதான செயலாளர்,
மேல் மாகாணம்

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 05/2019

எனது இலக்கம்: EST-3/POLIC/04/0039
பொது நிர்வாக மற்றும்
அனர்த்த முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2019.03.05

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>அரசியல் உரிமைகள் அனுபவித்தல் – தாபனவிதிக் கோவையின் XXXII ஆம் அத்தியாயத்தின் 2:3:2 ஆம் உப பிரிவினை திருத்தியமைத்தல்</u>**

தாபனவிதிக் கோவையின் XXXII ஆம் அத்தியாயத்தின் 2:3:2 ஆம் உப பிரிவினை திருத்தியமைத்து வெளியிடப்பட்ட 1991.08.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 1/89(II) இன் 1 ஆம் பிரிவின் பால் தங்களது அவதானத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

02. தேர்தலில்/ வாக்கொடுப்பொன்றில் களமிறங்கும் அரசியல் உரிமை உரித்துடைய அரச அலுவலர்களின் விடுமுறைகள் தொடர்பான ஏற்பாடுகளை திருத்தியமைப்பதற்கு 2019.01.14 ஆந் திகதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

03. அதற்கிணங்க தாபனவிதிக் கோவையின் XXXII ஆம் அத்தியாயத்தின் 2:3:2 ஆம் உப பிரிவினை பின்வரும் வகையில் 2:3:2:1 ஆம் உப பிரிவாக உள்ளடக்கி திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

2:3:2:1 என்றாலும், வருட இறுதியினை அண்மிக்கும் போது வேட்புமனுத்தாக்கல் கோரப்பட்டு அடுத்துவரும் வருடத்தில் தேர்தல்/ வாக்கொடுப்பு நடைபெறுமாயின், முன்னைய வருடத்தின் சாதாரண விடுமுறைகளுக்கு உட்படாத தேர்தல்/ வாக்கொடுப்பு நடைபெறும் வருடத்தின் ஏதேனும் கால எல்லையாகக் காணப்படுமாயின் அக் காலம் தேர்தல்/ வாக்கொடுப்பு நடாத்தப்படும் வருடத்தில் அவர்களுக்கு உரித்துடைய அமைய விடுமுறைகளில் இருந்து ஈடுசெய்து கொள்ள முடியும்

04. இவ் ஏற்பாடுகள் 2019.01.14 ஆந் திகதி முதல் எதிர்வரும் காலங்களில் நடைபெறவிருக்கும் தேர்தல்/ வாக்கெடுப்பு நடவடிக்கைகளின் போது வலுவானதாகும்.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிறி
செயலாளர்
பொது நிர்வாக மற்றும்
அனர்த்த முகாமைத்துவ அமைச்சு